SOND

*இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.*

*T.P:- 077-3314262   E-Mail:-senthu@eureka.lk   web:-ww.sond,lk*

# மாதாந்த அறிக்கை

## தை, 2013.

## Social Organizations Networking for Development

**RKM Road**
**Akkaraipattu**

**No. 19, Saravana Road**
**Kallady Batticaloa.**

**60" Arasady Road**
**Jaffna.**

*இதழின் உள்ளே .........*

1. மட்டக்களப்பு
2. யாழ்
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

## பெண்கள் மற்றும் விவசாய குழுக்களின் முகாமைத்துவ கொள்ளளவினை கட்டியெழுப்புதல் Management Capacity building for farmers & women groups

ஆரையம்பதி - கிழக்கு செல்வாநகர் தாய்மார் சங்கத்தின் பொதுக் கலந்துரையாடல் 31.01.2013ம் திகதி 2.00 மணிக்கு நடைபெற்றுள்ளது இக் கலந்துரையாடலில் கிராம உத்தியோகத்தர் உட்பட அங்கத்தவர்கள் 18 பேர் கலந்துகொண்டனர். கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்.

- சுயதொழில் செய்வதற்கு கடன் எடுக்க விரும்புவோர் தொழில் தொடர்பான விபரத்தோடு கடிதம் சங்கத்திடம் 1 வாரத்திற்குள் தரவேண்டும்.
- இம்மாதம் 10 பயனாளிகளுக்கு கடன் கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளல்.
- செயற்றிட்டத்திற்கு பொருத்தமான சுயதொழில் செய்வோர்களை தெரிவு செய்தல்
- மாதாந்தம் /உரிய முறையில் கடனை மீளச் செலுத்துவோர்களை தெரிவு செய்தல்.
- சங்கத்தினால் நடாத்தப்படும் கூட்டங்கள் மற்றும் செயற்பாடுகளில் கலந்துகொள்வோர்கள்

### மாதிரி பண்ணை அமைத்தல் தொடர்பாக

மண்டபத்தடி கமநல கேந்திர நிலையத்தின் கீழ் இயங்கிவரும் 25 விவசாய அமைப்புகளில் வாதக்கல்மடு கமநல அமைப்பினை மாதிரி விவசாயப்பண்ணை செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் திரு குணரெட்ணம் அவர்களுக்கு ஐம்பாதாயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டது. அதனைக்கொண்டு தனது பங்களிப்புடன் பயிரினங்கள் நடப்பட்டுள்ளது. இப்பண்ணையில் கோழி, மற்றும் முந்திரிகை மா,பலா,வாழை ,முருங்கை மரங்களும் மரக்கறி பயிர்களும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### மக்கள் பங்களிப்புடன் இயற்கை வளங்களை பாதுகாத்தல்

### (Support for community based natural resource management in 2 villages).

பெரிய உப்போடை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் மூன்று கிராமங்களினதும் தேவைகள் இனம் காணப்பட்டு அவற்றினை தீர்த்துக்கொள்வதற்கான செயற்பாட்டுத்திட்டமொன்றினை தயாரித்தல் தொடர்பில் கிராமங்களின் செயற்படும் கிராமமட்ட அமைப்புக்களையும் இணைத்துக்கொள்வது தொடர்பில் அவர்களது விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றது.









SOND

## வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு திட்டம்.

எமது சொண்ட் நிறுவனம் கிறிஸ்ரியன்எயிட் (Christen Aid ) நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டடிப்பளை பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள அம்பிளாந்துறை கிராமத்தின் அம்பிளாந்துறை வடக்கு,அம்பிளாந்துறை மேற்கு மற்றும் அம்பிளாந்துறை மத்தி ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் இயற்கை வீட்டுத்தோட்ட முறைமையினை மக்களிடையே அறிமுகப்படுத்துவதன் மூலம் உணவு பாதுகாப்பு நடவடிக்கையில் மக்களை ஈடுபடுத்தும் வகையில் 300 பயனாளிகளை கிராமத்திற்கு 100 பேர் என்ற அடிப்படையில் தெரிவுசெய்து வீட்டுத்தோட்டம் தொடர்பான திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அதன் அடிப்படையில் அம்பிளாந்துறை கிராமத்தின் விவசாயிகள் 300 பேரிடமிருந்தும் தங்களது விவசாய உற்பத்தியின் அளவு தொடர்பிலான ஆய்வு செய்யப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டது.

## காணிதொடர்பிலான ஆவணங்களை ஆவணப்படுத்தல் ஊடாக முரண்பாட்டினை குறைத்தல் (Conflict mitigation through land documentation)

“காணி ஆவணப்படுத்தல் ஊடாக முரண்பாட்டினை தணித்தல்” கருப்பொருளின் மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவுடன் SOND நிறுவனம் இணைந்து USAID நிறுவனத்தின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள கிராம சேவை உத்தியோகஸ்தர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கும். மற்றும் காணி உத்தியோகஸ்தர்களுக்குமான காணி ஒழுங்குபடுத்தல் தொடர்பான பயிற்சி நெறியினை நாடாத்தி வருகின்றது. அந்தவகையில் கீழ்வரும் பிரதேச செயலகங்களில் செயலமர்வுகள் இடம்பெற்றது.

1. கிரான் பிரதேச செயலகம் கலந்துரையாடல் 03.01.2013
2. ஏறாவூர்நகர் பிரதேச செயலக கலந்துரையாடல் 07.01.2013
3. வாழைச்சேனை தமிழ் பிரதேச செயலக கலந்துரையாடல் 15.01.201
4. வெல்லாவெளிப் பிரதேச செயலக கலந்துரையாடல் 17.01.2013
5. பட்டிப்பளை பிரதேச செயலக கலந்துரையாடல். 22.01.2013
6. ஓட்டமாவடி பிரதேச செயலக கலந்துரையாடல். 24.01.2013

## வளநிலைய பயன்பாடு

சொண்ட அமைப்பானது மக்களின் வாசிப்பு திறன் மற்றும் அனைவருக்கும் கனணி அறிவு ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இலவச நூலக சேவை மற்றும் இலவச கனணி சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த நிலையில் இம்மாதம் கனணி வகுப்பிற்கு புதிதாக 22 பேர் இணைந்து கொண்டுள்ளார்கள். 27 பேர் கனணி வகுப்பில் பயனடைந்துள்ளார்கள்.

# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம் கீழ்வருமாறு.

**Mine Risk Education**
மிதிவெடி அபாயக கல்வி செயற்திட்டம்

நகுலேஸ்வரம் J/226- (23.01.2013) , மதகல் தெற்கு /152 -(07.01.2013) , வடமராச்சி கிழக்கு மருதங்கேணி- நாகர்கோவில் J/424 -(02.01.2013), வாழலை இடைக்கண்டு J/284 – (03.01.2013) ஆகிய பிரதேசங்களின் கிராம வரைபடங்கள் கிராம அலுவலகத்தில் அக்கிராமமக்களின் மூலம் வரையப்பட்டுள்ளது.

வடமராச்சி கிழக்கு உடுத்துறை J/430 A பகுதி (30.01.2013 அன்று மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு Swiss labor Assistance (SAH) நிறுவனத்தின் உதவியுடன் மிதிவெடி அபாயக்கல்வி. அத்துடன் மிதிவெடி பற்றிய அறிவுபூர்வமான வீடியோக்காட்சிகள் காண்பிக்கப்பட்டது.

மிதிவெடி அபாயக்கல்வி செயற்பாட்டின் மூலம் பாடசாலைக்கு செல்லாதா சிறுவர்கள் இனம் காணப்பட்டனர். உடுவில் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தில் இவர்களை. உடுவில் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தருடன் இணைத்துள்ளோம்.

யுனிசெப் அனுசரனையுடன் மிதிவெடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 7 பயனாளிகளுக்கு வழங்கப்பட் வாழ்வாதார ஊக்குவிப்பு பற்றிய மேற்பார்வையானது 09.01.2013 ல் உடுவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.













“We all will Create a Better World”

SOND

## Non State Actors in Development Project
### அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்

**04.01.2013** ல் எமது அமைப்பினால் தயாரிக்கப்பட்ட கிராம மட்டத்திலான சமூக செயற்திட்ட முன்மொழிவுகளை **20 CSOO** களின் தலைவர்,செயலாளர்,பொருளாளர் ஏனைய சிவில் சமூக அமைப்புகளுக்கும் கிராம உத்தியோகத்தர்,கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,சமுர்த்தி உத்தியோகத்தர், சனசமூக உத்தியோகத்தர் ஆகியோர்களுக்கும் கையளிக்கப்பட்டது.

15.01.2013 வியாழக்கிழமை காலை 09.30மணி தொடக்கம் -12.30 மணிவரை இன ஐக்கியத்துக்கான ஒன்று கூடலும் பல்லின கலாச்சார விழா –தைப்பொங்கல் நிகழ்வு யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள வண்ணை அரசடி விநாயகர் மண்டபத்தில் நடைபெற்றது.இந்த நிகழ்வை **J/80** பெரிய கடை பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கம் இன் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டது. இதில் 77 பேர் பங்குபற்றியுள்ளார்கள்.

25.01.2013 வெள்ளிக்கிழமை அன்று சமூக பிரச்சனைகளை வெளிக்கொண்டுவருவதற்கும்,சிவில் சமூகத்தினரின் ஜனநாயக உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் உரிய பொறுப்புக்கள், கடமைகள் பற்றிய விழிப்புணர்வு செயல் அமர்வு **SOND** அலுவலகத்தில் நடைபெற்றது. இச்செயலமர்வில் இலங்கை சட்ட கல்லூரி இறுதி ஆண்டு மாணவி செல்வி.வை.யோகானந்தி அவர்கள் நடாத்தினார். பொது ஒருங்கிணைப்புக்குழு, மக்கள் மன்றம், கிராமமட்ட அமைப்பு, எமது சொன்ட் பணியாளர்கள் உட்பட கலந்துகொண்டார்கள்.

11.01.2013 வெள்ளிக்கிழமை **J/153** பெரியவிளான் **CSO** வின் ஏற்பாட்டில் 05 பெண்தலைமைத்துவ குடும்ப தலைவிகளின் பெயரில் அப்பகுதி நொத்தாரிஸ் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களால் உறுதி எழுதும் நிகழ்வு நடைபெற்றது.








"We all will Create a Better World"

# கருத்துக்களம்

31.01.2013 வியாழக்கிழமை காலை10.00 மணி தொடக்கம் 01.00 மணி வரை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மனித ஆரோக்கியத்துக்கு உகந்தது. இயற்கை வழி விவசாய முறைகளா? நவீன இரசாயன விவசாய முறைகளா? என்னும் தலைப்பில் கருத்துக்களம் நடைபெற்றது.இக்கருத்து களத்தை கோப்பாய் பிரதேச செயலர் திரு .ம.பிரதீபன் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். உதவி திட்ட பணிப்பாளர் கிராம சேவை அலுவலர்கள்,பட்டதாரி பயிலுனர்கள் சிவில் சமூக அமைப்பினர்,மக்கள் மன்ற உறுப்பினர், பொது ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்,விவசாய சம்மேளன பிரதிநிதிகள்,விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள்,யாழ்ப்பாண கல்லூரி விவசாய பீட விரிவுரையாளர்கள்,மாணவர்கள், SOND உத்தியோகத்தர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர், பங்குபற்றினர்



வாழ்வாதார உதவி வழங்குதல்.

16.01.2013 புதன்கிழமை கோப்பாய் J/287 செல்வநாயகபுர கிராமத்தில் 03 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது.

**28.01.2013** திங்கட்கிழமை J/153 பெரியவிளான் கிராமத்தில் உள்ள 05 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது. இதுவரை 68 வாழ்வாதார பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது.

SOND

# Inclusive Economic Development (IED) -
## ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தித்திட்டம்

ஜனவரி மாதம் 24.01.2013 ஆம் திகதி கோப்பாய் **IED** திட்ட பிரதேசத்தில் நவக்கிரி , சிறுப்பிட்டி , அச்செழு , கரந்தன், ஆகிய 4 இடங்களில் குழுத்தலைவர்களுக்கான விசேட ஆலோசனைக் கூட்டம் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. இதில் குழுத் தலைவர் 32 பேர் கலந்து கொண்டு இருந்தனர்.

06.01.2013 ஆம் திகதி யாழ்சக்தி நிலையத்தில் அதன் செயற்குழு நியமனம் சம்பந்தமாக ஒரு கலந்துரையாடல் பணிப்பாளர் தலைமையில் யாழ் சக்தியில் அலுவலகத்தில் இடம்பெற்றது.

22.01.2013 ஆம் திகதி 150 வீட்டுத் தோட்டப்பயனாளிகளுக்கு 500 பப்பாசிக் கன்றுகள்

29.01.2013 **IED** திட்ட செயற்பாடுகள் தொடர்பான அனுபவப்பகிர்வு இலங்கைக்கான கிறிஸ்ரியன் எயிட் நிறுவன முகாமையாளர் இருதயநாதன் அவர்களின் தலைமையில் மட்டக்களப்பு **YMCA** மண்டபத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக மட்டக்களப்பு உதவி அரச அதிபர் பங்கேற்று இருந்தார். மேலும் **IED** திட்டத்தின் விளைவுகள் , கற்றுக் கொண்ட விடயங்களின் அனுபவப்பகிர்வு மற்றும் வெளிப்படுத்தும் விளைவுகளின் காட்சிப்படுத்தல்கள் உடன் பல்வேறு அனுபவங்கள் , ஆலோசனைகள் பகிரப்பட்டது. இதில் **SOND** மட்டக்களப்பு, யாழ் , **OfFER Ceylon** ,திருகோணமலை , மட்டக்களப்பு. ஆகிய நிறுவனங்களுடைய பணியாளர்கள் கலந்து கொண்டனர்















SOND

## Homestead Garden Project
## வீட்டுத்தோட்ட வருமானம் தரும் திட்டம்

### மரக்கன்று வழங்கும் நிகழ்வு

07.01.2013ம் திகதி தந்தை செல்வாபுரம்,நகுலேஸ்வரம்,கூவில்,மாவிட்டபுரம் போன்ற கிராமங்களுக்கு 1000 பப்பாசிக் கன்றுகள் வழங்கப்பட்டதோடு தந்தை செல்வாபுரம், நகுலேஸ்வரம், கூவில், மாவிட்டபுரம், வித்தகபுரம், மாவிட்டபுரம் தெற்கு ஆகிய 6 கிராமங்களுக்கும் 300 முந்திரிகைக் கன்றுகளும் வழங்கப்பட்டது.

### களவிஜயங்கள்

19.01.2013ம் திகதி கலந்துரையாடலின் பின் பணிப்பாளரினால் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

25.01.2013 அன்று கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்திய விவசாய நிபுணர் முத்து அவர்களால் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது பயனாளிகளுக்கான பல ஆலோசனைகள் வழங்கியதுடன் நடுகை முறையினைகளையும் செய்தும் காட்டப்பட்டது. இதில் மாவிட்டபுரம், வித்தகபுரம் ஆகிய இரு கிராமங்களின் பயனாளிகளின் வீட்டுத் தோட்டங்கள் பார்வையிடப்பட்டது.

### கலந்துரையாடல்

குழுத்தலைவர்களுடனான கலந்துரையாடல் கூவில், வித்தகபுரம், தந்தை செல்வாபுரம் ஆகிய கிராமங்களில் இரு கிராமங்களை ஒன்றிணைத்து 6 கிராமங்களுக்கும் இரு தினங்களில் நடைபெற்றது. இதில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த விவசாய நிபுணர் திரு.முத்து அவர்களுடன் பணிப்பாளரும் கலந்து கொண்டார்.





# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம் கீழ்வருமாறு.

எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.

**(Create a conducive Society for Good Environment for the Future).**

## நாட்டப்பட்ட மரக்கன்றுகள் கண்காணிப்பு

“சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றிற்கான பிரசாரங்களை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதல்” எனும் உப செயற்பாட்டின் கீழ் அக்கரைப்பற்று அல் பதுார் பாடசாலை மற்றும் ஆலையவேம்பு திருநாவற்கரசு வித்தியாலயம் ஆகிய இடங்களில் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் மரக்கன்றுகளைக் கண்காணிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## கடந்த வருடம் நடப்பட்ட மரக் கன்றுகளுக்கான தொடர் கண்காணிப்பு

கடந்த வருடம் SOND அமைப்பினால் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் கண்ணகிபுரம் கிராமத்தில் உள்ள பட்டிமேடு அம்மன் ஆலயத்தில் ஆலய நிர்வாகத்தினருடன் இணைந்து நடுகை செய்யப்பட்ட மகோகனி மரக்கன்றுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுவருவதையும் மரங்கள் நன்கு வளர்ந்திருப்பதையும் காணலாம்.

## உற்பத்தி நுகர்வு தொடர்பான சந்தை ஆய்வு

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட தீவுக்காலைக் கிராமத்தில் உள்ள கிராம மறுமலர்ச்சி அமைப்பின் (RRF) 50 அங்கத்தவர்களை உள்ளடக்கி உற்பத்தி நுகர்வு தொடர்பான சந்தை ஆய்வு நடாத்தப்பட்டது.







“We all will Create a Better World”

# நிதியின்றிய செயற்திட்டங்கள்

அரச சார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மூவினத்தினையும் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 40 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

## கலந்துரையாடல்கள்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 4 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலின் போது 4 அறிவூட்டும் திரைப்படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. இம் மாதம் 2013.01.06 ம் திகதியன்று காந்தி கழக சிறுவர்களுக்கு சிங்கள வகுப்பு கழக உறுப்பினரான செல்வி சஜித்தா தலைமையில் நடைபெற்றது. இவ் சிங்கள வகுப்பில் 15 சிறுவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

**SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.**

01. காந்தி கழக சிறுவர்களுக்கு நான்கு கணனி வகுப்புக்கள் SOND பணியாளரான ஜெனிதா அவர்களினால் நடாத்தப்பட்டது.
02. காந்தி கழக சிறுவர்களுக்கு மூன்று ஆங்கில வகுப்பு பணியாளரான விஜயகுமார் அவர்களினால் நடாத்தப்பட்டது.





SOND

## கணனிப் பயன்பாடு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனி அறிவினை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அலுவலகத்தில் இலவச கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் 14 சிறுவர்களினால் 27 தடவைகள் கணனிப்பாவனை பயன்படுத்தப்பட்டுள்ளது.





## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 6 தலைப்பில் 30 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.



"We all will Create a Better World"

SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

“We all will Create a Better World”